1969 மார்ச் 26]

திரு. நா. வீராசாமி : தலைவர் அவர்களே, திமிரியில் இருக்கின்ற பி. டி. ஓ., தாசில்தார் இவர்கள் பள்ளிக்கூடத்தைப் பார்வை இட்டும், பள்ளியைப் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவில்லை. எரிந்துபோன கட்டடத்தைக் கட்ட அரசாங்கம் உடனடியாக நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கே. ஏ. மதியழகன்: கல்வி அதிகாரி அவர்கள் அதற்கான வேலைகளைக் கல்வி நிதியிலிருந்து செய்யலாம் என்று சொல்லியிருக்கிறார்கள். அது எவ்வளவு தூரம் நடக்கிறதோ அதை விரைவு படுத்தலாம்.

(இ) கோவை மாவட்டத் தலைமை மருந்தகத்தில் எக்ஸ்ரே படச் சுருள் இன்மையால் நோயாளிகள் பாதிப்பு.

திரு. எம். பூபதி : பேரவைத் தலைவர் அவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் அவசரப் பொது முக்கியமான கீழ்க்கண்ட காரியத்தை மாண்புமிகு சுகாதார அரிசன நல அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன் :—

"கோவை மாவட்டத் தலைமை மருந்தகத்தில் எக்ஸ்ரே பிலிம் இன்மையால் பல கொடிய நோய்களுக்கு சிகிச்சை செய்து கொள்ள இயலாமல் நூற்றுக்கணக்கான நோயாளிகள் கஷ்டப்படும் நிலை."

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இந்திய அரசு எக்ஸ்ரே படச்சுருள் இறக்குமதியை நிறுத்திவிட்ட காரணத்தால் நாடு முழுவதிலும் இப் படச் சுருள் பற்றுக்குறை பெரிதும் இருந்து வருகிறது. இந்தியாவில் எக்ஸ்ரே படச்சுருள் தயாரிக்கும் ஒரே நிறுவனமாகிய இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம் நாட்டின் தேவையில் சுமார் 50 சதவீதம் மட்டுமே வழங்குவதால் எக்ஸ்ரே படச்சுருளின் தேவையைச் சரிக்கட்ட இயலவில்லை. இதனால் கடந்த மூன்று அல்லது நான்கு மாதங்களாக அரசு மருத்துவ மனையில் படச்சுருள் பற்றுக்குறை ஏற்பட்டது ; கோயம்புத்தூர், அரசுத் தலைமையிட மருத்துவ மனையிலும் இப்பற்றுக்குறை இருந்தது. இந்திய அரசு இப்படச்சுருளை இறக்குமதி செய்யும் கொள்கையைத் தளர்த்தினால் அன்றி, அல்லது இந்துஸ்தான் புகைப்படச் சுருள் தயாரிப்பு நிறுவனம் முழுத் தேவையும் நிறைவு செய்யும் வகையில் உற்பத்தியைப் பெருக்கினால் அன்றி, இந்த இடர்பாடு தொடர்ந்து நீடிக்குமெனத் தெரிகிறது.

திரு. எம். பூபதி : தலைவர் அவர்களே, இந்த பிலிம் இந்தியாவிலேயே உற்பத்தி செய்யப்பட்டும், வெளிநாடுகளுக்கெல்லாம் ஏற்றுமதி செய்யப்படுவதால் மத்திய சர்க்காரை வற்புறுத்தி, நம் நாட்டில், குறிப்பாக தமிழ்நாட்டில், பல மருத்துவ மனைகளில் எக்ஸ்ரே இல்லாத நெருக்கடியைப் போக்க இந்த அரசு நடவடிக்கை எடுகுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : தலைவர் அவர்களே, இந்தத் தட்டுப்பாடு நம் மாநிலத்தில் மட்டுமல்லாமல், அகில இந்தியாவிலும் இருப்பதை மத்திய சர்க்கார் அறியும். உதகையில் இந்துஸ்தான் ∴போட்டோ பிலிம் கம்பெனியிலிருந்து 50 சதவீதம் கொடுப்பதோடு, மேலும் அவர்கள் செய்து கொடுக்க வேண்டும் என்று ஆணையிட்டால், அது பூர்த்தி செய்யப்படும். அதோடு வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்வதையும் தளர்த்தினால், நலமாக இருக்கும். அந்த வகையில் அரசாங்கம் கவனம் செலுத்தும்.